இணைப்பு XIX

[163-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 20$_0$-க்கான விடையைக் காண்க.]

(அ) மற்றும் (ஆ) : நீர் நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைப்பதற்கான கருத்துரு, இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்திற்கு 1978 டிசம்பரில் சமர்ப்பிக்கப்பட்டது. இதனை அக்கழகத்தின் முந்நாள் தலைமை இயக்குநர் டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் அவர்களும் பரிந்துரை செய்து, இந்திய அரசு அறிவியல், மற்றும் நுணுக்காய்வு அமைச்சுக்கு அனுப்பினார்கள். இது இந்தியா, மற்றும் ஸ்வீடன் நாட்டு அலுவலர்கள் கொண்ட உபக்குழுவில் 1978 டிசம்பரில் விவாதிக்கப்பட்டு சுவீடன் பன்னாட்டு மேம்பாடு நிறுவனம் (SIDA)-வின் நிதி உதவிக்காக, இந்திய அரசினால் முறைப்படி கோரப்பட்டது. 1980 ஜனவரி முதற்கொண்டு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இத்திட்டத்திற்கு, நிதி உதவி செய்ய சுவீடன் பன்னாட்டு மேம்பாட்டு நிறுவனம் (SIDA) முன் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. எனவே இந்திய அரசின் இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் ஒப்புதல் பெற்று, 1980 ஆம் ஆண்டு சனவரியில் இந்தத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என நம்பப்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் நீர் நுட்ப ஆராய்ச்சி நிலையம் ஒன்று அமைக்கும் போது, கீழ்க்காணும் பலதரப்பட்ட பிரிவுகள் நிறுவப்படும் :—

(1) மேற்தரை நீர்.

(2) நிலத்தடி நீர்.

(3) நீர்த்தரம்.

(4) வேளாண்மை—நீர் மேலாண்மை.

(5) இதர பகுதிகளுக்கான நீர் மேலாண்மை.

(6) பாசனப் பொருளியல்.

(7) வாநிலை மற்றும் வேளாண்மைப் பௌதிகம்.

(8) கிராமப் பொருளாதாரம் மற்றும் மண் அறிவியல்.

(9) அமைப்புப் பொறியியல்.

(10) விரிவாக்கக் கல்வி.

மேற்காணும் பிரிவுகள், இத்திட்டத்தின் நுணுக்காய்வுக்காகக் கொள்ளப்படும். மேலும், இத்திட்டத்தைச் செயல்படுத்த ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 150 இலட்சங்கள் செலவாகும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது.